

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பொதுக்கூட்டம் முத்துக்கடை பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. அமைச்சர் – இராணிப்பேட்டை மாவட்ட தி..மு.க செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, கழக இலக்கிய அணி துணை செயலாளர் ஈரோடு இறைவன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மருது கணேஷ், மாவட்ட நிர்வாகிகள் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மு.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார், நகர செயலாளர் பி.பூங்காவனம், நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் தெற்கு ஒன்றியம் மலையனூர் ஊராட்சியில் "ஓரணியில்தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வி.கணேசன் பரப்புரையை துவக்கி வைத்தார். உடன் தொகுதி பொறுப்பாளர் சுபா.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர் செங்குட்டுவன், அ.கோதண்டபாணி, கே.என்.டி.சங்கர், குமணன், எழுத்தூர் பிரபாகரன், அ. பெரியசாமி மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளனர்.

### எங்களுக்கு வீட்டுமனை பட்டா - எனக்கு அரசு வேலையும் வழங்கி

# எங்கள் குடும்பத்தை காப்பாற்றிய முதல்வருக்கு நன்றி!

## மடப்புரம் அஜித் குமார் சகோதரர் நவீன் குமார் பேட்டி!

சிவகங்கை, ஜூலை 4 -

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம்தாலுகா மடப்புரம் காளியம்மன் கோவிலில் காவலாளி அஜித் குமார் கடந்த 29ம் தேதி நகை திருடு போனது தொடர்பாக போலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அஜித் குமார் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது அஜித் குமார் ஏற்கனவே மரணம் அடைந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள்.



அவரது மரணம் தொடர்பில் 6போலிசார் தொடர்பு உள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் கூறிய தன் பேரில் 6 போலிசார் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்கள். தொடர்ந்து 6போலிசார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் கட்டாய காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மானாமதுரை டி.எஸ்.பி. சண்முகசுந்தரம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மரணம் அடைந்த அஜித்குமாருக்கு தாயார், சகோதரர் உள்ளார்கள். அஜித் குமார் மரணம் குறித்து தமிழக முதல்வர் தளபதி அவர்கள் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக மடப்புரத்திற்கு அஜித் குமார் வீட்டிற்குச் சென்ற கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் மூலமாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாயார் மாலதி, சகோதரர் நவீன் குமார் ஆகியோருக்கு வருத்தம் தெரிவித்து ஆறுதல் கூறினார்.

மேலும் அரசு அவருக்கு வேண்டிய உதவிகளை செய்யும் என்றும், சட்டத்திற்கு முன் குற்றவாளிகள் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை பெற்றுத் தரப்படும் என்று உறுதி கூறினார்.

மேலும் அவருக்கு தேவையான உதவிகளை அரசு செய்து தருவதாக உறுதி கூறினார். அப்பொழுது அஜித் குமார் தம்பி நவீன் குமார் தான் ஐடிஐ பொறியியல் டிப்ளமோ பட்டதாரி என்றும் தனக்கு ஒரு அரசு வேலை வேண்டும் தங்களுக்குச் சொந்தமாக வீடு இல்லை வீடு கட்டி தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அவர் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட முதல்வர் அவர்கள் உடனடியாக மடப்புரம் அருகே உள்ள தேளியில் மூன்று சென்ட் வீட்டுமனைப்பட்டா உத்தரவு , நவீன் குமாருக்கு காரைக்குடி ஆவின் நிலையத்தில் வேலை ஆகிய உத்தரவினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர் . பெரியகருப்பன் நேரில் சென்று வழங்கினார். இதனை பெற்றுக் கொண்ட அஜித்குமார் சகோதரர் நவீன்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது. தமிழக முதல்வர் எனது சகோதரர் அஜித் குமாரின் மரணம்குறித்து தீவிரமான துரித நடவடிக்கை எடுத்து வருகிறார்.

வழக்கை சி.பி.ஐக்கு மாற்றி உள்ளது எங்களுக்கு குடும்பத்தாருக்கு நம்பிக்கையை தருகிறது .உரிய முறையில் தீவிரமாக வழக்கு விசாரணை நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். என் தாயாரும் நானும் முதல்வரிடம் கோரிக்கை வைத்த 10 மணி நேரத்திற்குள் எங்களுக்கு வீட்டு மனை பட்டாவும் எனக்கு காரைக்குடி ஆவின் நிறுவனத்தில் வேலைக்கான உத்தரவினைவழங்கி உள்ளார்.

எனக்கு மாதம் இதன் மூலம் சம்பளம் ரூபாய் 30,000 கிடைக்கும். இத்தகைய பேருதவி செய்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் இதற்கு உறுதுணையாக ஏற்பாடு செய்த கூட்டுறவுத் துறை அமைச்சர்கேஆர். பெரியகருப்பன் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் எங்கள் குடும்ப த்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.


மேலும் எனது சகோதரன் மரணம் தொடர்பாக யாரும் எந்த அரசியல் கட்சி நிர்வாகிகள் எந்தவித சமரசமும் பேசவில்லை. பணம் தருவதாக கூறவில்லை. தவறான தகவல்களை வேண்டுமென்றே கூறி வருகிறார்கள்.

தி.மு.க.வினருக்கும் எங்களது குடும்பத்தினருக்கும் நெருங்கிய தொடர்பு பழக்கம் உண்டு. என வே எனது சகோதரன் மரணம் குறித்து ஆறுதல் தெரிவிக்கவே வந்தார்கள். எனது சகோதரன் மரணத்தை தேவையில்லாமல் அரசியல் ஆக்க வேண்டாம் . நாங்கள் எனது அண்ணன் அஜித் மறைவினால் தாங்க முடியாத துயரத்தில் இருக்கிறோம். தமிழக முத ல்வர் அவர்கள் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறோம் . விசாரணை நடத்தி எனது சகோதரன் மரணத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தரவேண்டும் என்று விரும்புகிறோம்.

இவ்வாறு நவீன்குமார் கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை அ.இராஜாராமன்
### ஜூலை 4 (2020)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

கிளைக் கழகச் செயலாளர், நகரப் பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## 'ஓரணியில் தமிழ்நாடு' மாபெரும் பேரணி - பொதுக்கூட்டம்!

சேலம், ஜூலை, 4–

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் ஆத்தூரில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வடக்கு நகர செயலாளர் கே.பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார், தெற்கு நகர செயலாளர் ஏ.ஜி.ராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார்.

நகர மன்ற தலைவர்கள் நிர்மலா பபிதா மணிகண்டன், அலெக்சாண்டர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பின ருமான எஸ்.ஆர்.சிவலிங்கம், தலைமை கழக பேச்சாளர் கோவை சம்பத், கள்ளக்குறிச்சி நாடாளு மன்ற உறுப்பினர் தே.மலையரசன், கணேஷ்குமார் ஆகியோர் சிறப்புரை யாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ் குமார், சின்ன துரை, மாவட்ட பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம், மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் சந்திரமோகன், மலர் விழி ராஜா, மனோகரன், முத்து லிங்கம், சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் செழியன், மணி, பாலமுருகன், சித்தா ர்த்தன், வரதராஜன் ,அழகுவேல், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, விஜய குமார், மாதேஸ்வரன், மாணிக்கம் , சக்கரவர்த்தி, ரத்தினவேல், சதீஷ்கு மார் , நரசிங்கபுரம் நகர செயலாளர் வேல்முருகன், மாவட்ட பிரதிநிதிகள் சம்பத்குமார், ஸ்டாலின், பாலமுரளி கிருஷ்ணன், நகர துணை செயலாளர்கள் புவனேஸ்வரி வேல்முருகன், குமார், மாணிக்கம், பேரூர் செயலாளர்கள் காங்கமுத்து மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் செந்தில்குமார் நன்றியுரை யாற்றினார்.



# தி.மு.க.
# இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருச்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ஆர்.கார்த்திக் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 07.07.2025 | முசிறி நகரம் | மேல சாலியத் தெரு, முசிறி. | சீனி விடுதலை அரசு<br>ந.காருண்யா |
| 2 | | முசிறி நகரம் | கீழ சந்தப்பாளையம் | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>அ.சுஹாசினி |
| 3 | 08.07.2025 | தொட்டியம் பேரூர் | வாணப்பட்டறை | துரை பாண்டியன்<br>ரா.சிந்துநதி |
| 4 | | தொட்டியம் கிழக்கு ஒன்றியம் | மணமேடு ஊராட்சி | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>மு.ராமமூர்த்தி |
| 5 | | தாத்தையங்கார்பேட்டை மேற்கு ஒன்றியம் | நீலியாம்பட்டி ஊராட்சி | பவித்ரம் கண்ணன்<br>ஐ.பாலகணபதி |
| 6 | 10.07.2025 | சா.கண்ணனூர் பேரூர் | சமயபுரம் கடைவீதி | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>ர.சிந்துநதி |
| 7 | | தாத்தையங்கார்பேட்டை பேரூர் | கலைஞர் திடல், கடைவீதி. | துரை பாண்டியன்<br>அ.விஜலெட்சுமி |
| 8 | | மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றியம் | தத்தமங்கலம் ஊராட்சி, தேவிமங்கலம். | நாமக்கல் ராஜகோபால்<br>ரா.கனிமொழி |
| 9 | | முசிறி மேற்கு ஒன்றியம் | கோமங்கலம் ஊராட்சி | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>ந.காருண்யா |
| 10 | 11.07.2025 | மேட்டுப்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>அ.விஜலெட்சுமி |
| 11 | | தாத்தையங்கார்பேட்டை கிழக்கு ஒன்றியம் | சிட்லரை ஊராட்சி | நாமக்கல் ராஜகோபால்<br>ர.சிந்துநதி |
| 12 | | துறையூர் நகரம் | வடக்குத்தெரு, நான்கு சாலை. | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>ந.காருண்யா |
| 13 | 12.07.2025 | மண்ணச்சநல்லூர் பேரூர் | எதுமலை பிரிவு சாலை | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>அ.விஜயலெட்சுமி |
| 14 | | மண்ணச்சநல்லூர் மத்திய ஒன்றியம் | மாரியம்மன் கோயில் அருகில், வாழையூர் ஊராட்சி. | பவித்ரம் கண்ணன்<br>த.குமரவேல் |
| 15 | | மண்ணச்சநல்லூர் மேற்கு ஒன்றியம் | திருப்பைஞ்ஞீலி ஊராட்சி கடைவீதி | மணப்பாறை காசிராஜன்<br>ஐ.பாலகணபதி |
| 16 | | துறையூர் கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், குன்னுப்பட்டி. | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>ந.காருண்யா |
| 17 | 15.07.2025 | துறையூர் மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், கோணப்பாதை. | துரை பாண்டியன்<br>ந.காருண்யா |
| 18 | | காட்டுப்புதூர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், காட்டுப்புத்தூர். | நாமக்கல் ராஜகோபால்<br>சை.சேக் அலிமாஸ் அலி |
| 19 | | தொட்டியம் மேற்கு ஒன்றியம் | மேய்க்கல் நாயக்கன்பட்டி கடைவீதி | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>த.குமரவேல் |
| 20 | 16.07.2025 | உப்பிலியபுரம் வடக்கு ஒன்றியம் | நாகநல்லூர் ஊராட்சி | மு.விஜய ரெத்தினம்<br>ரா.சிந்துநதி |
| 21 | | உப்பிலியபுரம் பேரூர் | ஈச்சம்பட்டி | ரெங்கநாதபுரம் பாஸ்கர்<br>ந.காருண்யா |
| 22 | 17.07.2025 | துறையூர் மேற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், திருமானூர். | துரை பாண்டியன்<br>சை.சேக் அலிமாஸ் அலி |
| 23 | 20.07.2025 | உப்பிலியபுரம் தெற்கு ஒன்றியம் | பச்சைபெருமாள்பட்டி ஊராட்சி, நெட்டவேலம்பட்டி. | துரை பாண்டியன்<br>அ.விஜயலட்சுமி |
| 24 | | பாலகிருஷ்ணம்பட்டி பேரூர் | பி.மேட்டூர் | மணப்பாறை காசி ராஜன்<br>ரா.சிந்துநதி |
| 25 | | முசிறி கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, கரட்டாம்பட்டி. | சீனி விடுதலை அரசு<br>ப.வெங்கடேஷ் |

திருச்சி
நாள் : 02.07.2025

கலைஞர் 100
1924 - 2023

